# <u>அளவீட்டு வினாக்கொத்தினை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்</u>

**<u>வினா இல.1 முதல் 8 வரை</u>** உங்களது நிறுவனத்தை இனங்கானுவதற்கு தகவல்களை சரியாக குறிப்பிட வேண்டும் என்பதுடன் நிறுவனத்துக்குச் சொந்தமான கிளைகள் வேறு இடத்தில் அமைந்திருப்பின் வினா இல.5 கீழ் " ஆம்" எனக் குறிப்பிட்டு அவ்வெண்ணிக்கையை எழுதவும். சில பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்வதாயின் அதிகளவு ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளும் பிரதான பொருளாதார செயற்பாட்டினை வினா இல.6 கீழ் குறிப்பிடவும்.

**<u>வினா இல.9</u>** - உங்களது நிறுவனத்தில் கடந்த மாதத்தினுள் நடைமுறையிலிருந்த நாட்களின் எண்ணிக்கையை குறிப்பிடவும்.

**<u>வினா இல.10</u>** - வேலை வாய்ப்பினை பின்வரும் பொருள்கோடலைப் பயன்படுத்தி நிரப்பவும்.

முழுநேர ஊழியர்கள் :- சம்பளம், கூலி அல்லது செய்த வேலைக்காக கொடுப்பனவைப் பெற்று வாரத்தின் சாதாரண வேலை நாட்களினுள் ஏதேனும் பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடும் ஊழியர்கள் (வாரத்தினுள் அவரது சாதாரண வேலை செய்யும் மணித்தியால எண்ணிக்கை தொழில்கொள்வோரால் தீர்மானிக்கப்படும்)

பகுதிநேர ஊழியர்கள் :- முழுநேர ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் ஏதேனும் கொடுப்பனவு பொருட்டு குறித்த ஆய்வுக் காலத்திற்கு அப்பால் பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடுதல் அல்லது வேறு சேவை நிலையத்தில் முழுநேர சேவையாற்றுபவர்கள் அவர்களது வழமையான கடமை நேரங்களுக்கு அப்பால் இந்த நிறுவனத்தின் ஏதேனும் காலப்பகுதியில் கொடுப்பனவு பெற்று சேவையில் ஈடுபடுவதாயின் அவர்கள் பகுதிநேர ஊழியர்களாகக் கருதவும்.

முனைப்பான உரிமையாளர்கள் மற்றும் சுறுசுறுப்பான பங்காளர்கள் :- நிறுவனத்தின் நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாக ஈடுபடும் உரிமையாளர்கள் மற்றும் பங்காளர்கள் ஆகும். கூறின் வெளி நடவடிக்கைகளில் ஈடுபடும் செயலற்ற பங்காளர்கள் அடங்கலாகாது.

சம்பளம் பெறாது சேவையாற்றும் குடும்ப உறுப்பினர்கள் :- உரிமையாளரின் வீட்டில் வசித்து, இந்த காலப்பகுதியினுள் உரிய சம்பளத்தை பெறாது குறைந்தபட்சம் பொதுவாக வேலைசெய்யும் நேரத்தில் 1/3 யேனும் கூறில் வேலைசெய்யும் சகல ஊழியர்கள் மற்றும் உரிமையாளரின் வீட்டில் வசிக்காது, வெளியிலிருந்து வந்து சம்பளமின்றி வேலைசெய்யும் நபர்கள் இதிலடங்குவர்.

**<u>வினா இல.11</u>**

நிரந்தர ஊழியர்கள் :- நிறுவனத்தின் நிரந்தர பதவியினர் எண்ணிக்கைக்குரியவர்கள்.

தற்காலிக ஊழியர்கள் :- நிரந்தர பதவியினர் எண்ணிக்கைக்கு உள்ளீர்க்கப்படாத நிலையான அடிப்படையில் வேலைசெய்யும் தகுதிகாண் நிலையிலுள்ளவர்களும் ஏனையோர்களும்

அமய ஊழியர்கள் :- தொடர்ந்து தொழலில் வழங்குவதற்கான உத்தரவாதமில்லாத பெரும்பாலும் நாளாந்த சம்பள அடிப்படையில் வேலையில் ஈடுபடுகின்ற குறுகியகால வேலைகள்

பொருட்டு ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்கள் வெளி ஊழியர்கள் அல்லது வீட்டில் இருந்து வேலைசெய்யும் ஊழியர்கள் இதன்கீழ் சேர்த்தல் வேண்டும்.

கற்பவர்களும் பயிலுநர்களும் :- தொழிற் பயிற்சியாளர்கள் மற்றும் செய்த வேலைக்காக கூலி பெறுபவர்கள்.

## <u>நியம தொழில் வகைப்படுத்தல்</u>

சர்வதேச நியம தொழில் வகைப்படுத்தலின்படி உமது நிறுவனத்தில் சேவையிலுள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கையை பின்வருமாறு வகைப்படுத்தவும்.

1. முகாமையாளர்கள், சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் சட்டம் இயற்றுவோர் -

நிறுவனத்தின் அல்லது வியாபாரத்தின் அல்லது நிர்வாக கூறின் ஒட்டுமொத்த செயற்பாடுகளை திட்டமிட்டு ஒருங்கிணைப்பு செய்து மதிப்பிடுவதன் மூலம் ஊழியர்களை நிருவகிக்கும் நபர்கள்.

2. தொழில்வண்மையாளர்கள் -

விஞ்ஞானம்சார், நுட்பம்சார் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களை உபயோகித்து தன்னிடமுள்ள அறிவை பயன்படுத்தி அந்த அறிவை முறையாக கற்பித்து அல்லது மேற்படி செயற்பாடுகளின் கலவையாக செயற்படுபவர்கள்.

உ-ம்: விஞ்ஞான, பொறியியல் தொழில்வாண்மையாளர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், கணக்காளர்கள், தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலர் போன்றோர்.

3. தொழினுட்பவியலாளர்கள் மற்றும் சார்ந்த தொழிறதுறையினர்

விஞ்ஞானம்சார், நுட்பம்சார் எண்ணக்கருக்களையும் முறையியல்களையும் பயன்படுத்தி ஆராய்ச்சிகளை செய்வதன் மூலம் தொழில்னுட்ப மற்றும் சார்ந்த தொழிற்துறையினராக செயற்படும் ஊழியர்கள்.

உ-ம் : விஞ்ஞானம், பொறியியல் சார்ந்த தொழிற்துறையினர், சுகாதாரம் சார்ந்த தொழிற்றுறையினர், நிதி மற்றும் கணித உதவி தொழிற்றுறையினர் அடங்கலாக மேற்படி குறிப்பிட்ட தொழில்வாண்மையாளர்களின் கீழ் சேவையாற்றும் தொழினுட்ப தொழிற்துறையினர்.

4. எழுதுநர் மற்றும் எழுதுநர் உதவி ஊழியர்கள்

அறிக்கை பேனுவதன் மூலம் ஒழுங்குகளை செய்து களஞ்சியப்படுத்தி, கணக்கு பார்த்து அத்துடன் களஞ்சியப்படுத்தும் ஆவணங்களை மீள பரிசீலனை செய்து எழுதுவினைஞர் சேவையிலுள்ள ஊழியர்கள்.

5. போக்குவரத்து, மனையாட்சி, உணவுபானம் வழங்கல், தனிப்பட்ட பாதுகாப்புச்சேவை, தனிப்பட்ட பாதுகாப்பு பிரிவுகளுக்கு ஏற்புடைய, வேறு சேவைகளை வழங்கும் ஊழியர்கள் மற்றும் வர்த்தக காட்சியாளர்கள் உள்ளிட்ட சில்லறை மற்றும் மொத்த வர்த்தக நிறுவனங்களின் வர்த்தக ஊழியர்கள்.
6. விவசாய செய்கைகள் விதைத்தல் முதல் அறுவடை செய்தல் வரையிலான ஊழியர்கள், விலங்கு வளர்ப்பு, விலங்கு உற்பத்தி பற்றிய பயிற்றப்பட்ட ஊழியர்கள்,

விசித்திர மீன்கள் / நன்னீர் மீன் பழுகவைத்தல் மற்றும் பாதுகாப்பில் ஈடபடுபவர்கள், வனத்திலிருந்து பயிர்கள் வகைகள், பழ வகைகளை சேகரிப்பில் ஈடுபடுபவர்கள், கடற்தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள், வேட்டையாடுதல் போன்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட பயிற்றப்பட்ட ஊழியர்கள்.

7. உரிய துறையில் விசேட அறிவு மற்றும் தேர்ச்சியை பயன்படுத்தி கட்டட நிர்மாணமும் பராமரிப்பும், உலோக தயாரிப்பு, உலோக சட்டகம் அமைத்தல், பொறிமுறை உபகரணங்களை அமைத்தல் அல்லது பொருத்துதல்., ஒன்றுசேர்த்தல், பொறி, இயந்திர உபகரணங்களை திருத்தலும் பராமரிப்பும், அச்சிடல் துறையின் உற்பத்திகள், உணவுப்பொருள் தயாரிப்பு, கைவினைக் கைத்தொழில் உள்ளிட்ட புடவை கைத்தொழிலின் அல்லது உலோக பொருள்களை பயன்படுத்தி பொருள் உற்பத்தியில் ஈடுபடும் ஊழியர்கள் இந்த செயன்முறையில் ஈடுபடும் ஊழியர்கள் முழுமையாக கையாலேயோ அல்லது கையினால் இயக்கும் பொறி அல்லது வேறு உபகரணங்களை பயன்படுத்தலாம்.

8. கைத்தொழில், விவசாயத் துறையின் சகல இயந்திர இயக்குபவர்கள் மற்றும் கவனம் செலுத்துபவர்கள், புகையிரதம் , விமான , கடல் படகுகள் உள்ளிட்ட சகல வாகன சாரதிகள் மற்றும் செயற்படுத்துபவர்கள் ஏதேனும் விசேட முறையியல்களை பயன்படுத்தி பொறி அல்லது உபகரண பாகங்களை சேர்ப்பவர்கள் மற்றும் ஒன்று சேர்ப்பவர்கள்.

9. கையால் செயற்படுத்தும் உபகரணங்கள் மற்றும் பெருமளவு உடல் சக்தியைப் பயன்படுத்தி ஈடுபடும் அடிப்படை தொழில்கள் வழக்கமாக செய்துகொண்டு செல்லும் தொழில்கள் மற்றும் இலகு பணிகளில் ஈடுபடும் பயிற்றப்படாத தொழிலாளிகள் இதன்கீழ் அடங்குவர்.

## <u>வினா இல.11 (தொடர்பாக….)</u>

ஒரு நாளுக்கு வேலைசெய்யும் மணித்தியாலங்கள் :- மேலதிகநேர மணித்தியாலங்கள் சகிதம் ஊழியரொருவர் வழமையாக ஒரு நாளுக்கு வேலைசெய்யும் மணித்தியாலங்களை இங்கு குறிப்பிடவும்.

ஒரு வாரத்திற்கு வேலை செய்யும் மணித்தியாலங்கள் :- மேலதிகநேர மணித்தியாலங்கள் சகிதம் ஊழியரொருவர் வழமையாக ஒரு வாரத்திற்கு வேலைசெய்யும் மணித்தியாலங்களை இங்கு குறிப்பிடவும்.

தற்போது ஒரு வாரத்திற்கு ஈடுபடுத்தும் சராசரி மேலதிகநேர மணித்தியாலங்கள் :- ஊழியரொருவர் ஒரு வாரத்தினுள் வேலைசெய்யும் மேலதிக நேர மணித்தியாலங்களின் சராசரி (அதாவது, ஒரு வாரத்தில் வழங்கப்படும் மேலதிகநேர சேவையில் ஈடபட்ட ஊழியர் எண்ணிக்கையினால் வகுக்கவும்)

**<u>வினா இல.12</u>**

நிறுவனத்தின் உரிமையாளர்கள் ∴ தொழில் கொள்வோர் மற்றும் சுறுசுறுப்பான பங்காளர்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகள் பொருட்டு முனைப்பாக பங்களிப்பதாயின் இல.1ஐ வட்டமிட்டு ஒருவர் பொதுவாக ஒரு வாரத்தில் வேலைசெய்யும் மணித்தியாலங்களை குறிப்பிடவும். அவ்வாறின்றேல் இல.2ஐ வட்டமிடவும்.

**<u>வினா இல.13</u>**

நிறுவனத்தின் ஊழியர் வெற்றிடங்கள் இருப்பின் இல.1 ஐ வட்டமிட்டு வினா இல.14க்குச் செல்க.
அவ்வாறின்றேல் இல.2 ஐ வட்டமிட்டு வினா இல. 15க்குச் செல்க.

**<u>வினா இல.14</u>**

வினா இல.11 இல் குறிப்பிடப்பட்ட தொழில் வகைப்படத்தலுக்கு ஏற்புடையதாக உமது நிறுவனத்தில் வெற்றிடமாகவுள்ள 5 தொழில் வகைகளை வெற்றிடங்களின் எண்ணிக்கையுடன் முன்னுரிமை ஒழுங்கின்படி இங்கு குறிப்பிடவும்.

**<u>வினா இல.15</u>**

வழங்கப்பட்ட அடிப்படைச் சம்பளம் :- உரிய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் அடிப்படைச் சம்பளங்களின் (Basic Salary) கூட்டுத்தொகையை இங்கு குறிப்பிடவும்.

வாழ்க்கைச் செலவுப்படி / அதற்கு சமமான பிற படிகள் :- வாழ்க்கைச் செலவுப்படி / அதற்கு சமமான பிற படிகள் பொருட்டு ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற தொகைகளின் கூட்டுத்தொகையை இங்கு குறிப்பிடவும்.

**<u>வினா இல.16</u>**

(மாதாந்த சம்பளம் மற்றும் மேலதிகநேர படிகள் தவிர்ந்த நிறுவனத்தினால் ஊழியர்கள் பொருட்டு கூறப்பட்ட மேலதிக செலவினங்கள்)

சமூகப் பாதுகாப்பு EPF/ETF போன்ற போக்குவரத்துக்காக கூறப்பட்ட செலவு - கடந்த மாதத்திற்குரிய தகவல்களைக் குறிப்பிடவும்.

உணவு/சீருடை/தங்குமிடம்/உத்தியோகபூர்வ விடுதி/சுகாதார சேவைகள் - சராசரி மாதாந்த செலவினங்களை குறிப்பிடவும்.

பயிற்சித்திட்டங்கள்/செயலமர்வுகள் போன்ற - கடந்த வருடத்தினுள் கூறப்பட்ட செலவினங்களின் கூட்டுத்தொகையை குறிப்பிடவும்.

**<u>வினா இல.17</u>**

கடந்த வருடத்தினுள் நிறுவனம் ஊழியர்களுக்கு அல்லது அவர்களது குடம்ப உறுப்பினர்கள் பொருட்டு கூறப்பட்ட வேறு செலவினங்களை இப்பகுதியின் கீழ் சேர்க்கவும்.